சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 20.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 4201/E/2024**

திரு.ஆ.இராமமூர்த்தி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட
ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மற்றும் பதிவேடுகள் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி மாவட்டம்- 620 001. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், திருமதி.தமிழ்செல்வி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருச்சி கிழக்கு வட்டம் அவர்கள் இவ்வாணையத்தில் 27.03.2026 அன்று நேரில் ஆஜராகி மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் வட்டாட்சியர், திருச்சி கிழக்கு அவர்களின் 25.03.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு, தொடர்பில்லாத வகையில் தகவல் வழங்கிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.கு.சித்தார்த்தன், திருச்சிராப்பள்ளி கிழக்கு நிலஅளவை வட்டத் துணை ஆய்வாளரின் விளக்கத்தில், *திருச்சி கிழக்கு வட்டம், சிந்தாமணி கிராமம், வார்டு F, பிளாக் 43, நகரளைவை எண்.53-ல் உள்ள எதிர் மனுதாரர் திரு.இராமமூத்தி என்பவர் மேல்புறம் உள்ள நகரளவை எண்.51-ல் மனுதாரர் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதாக தொடந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் முன்பு மனுதாரர் சொத்தையும், எதிர் மனுதாரர் சொத்தையும் சர்வேயர் உதவியுடன் பார்வையிடுமாறு,*

மாண்புமிகு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்ததாகவும், 11.03.2023-ஆம தேதி காலை 11.00 மணியளவில் மேற்படி இரு சொத்துகளையும் மாநகராட்சி சர்வேயர், சப்இன்ஸ்பெக்டர் ஆப் சர்வேயர் திரு.தமிழழகன் உதவியுடன் அளவீடு மேற்கொள்ளப்பட்டு, வரைபடத்துடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அவ்வரைபடத்தில் தென்கிழக்கு மூலையில் அளவீடானது 1.6 மீட்டருக்கு பதிலாக 0.6 மீட்டர் அளவு குறைவாக பதியப்பட்டு அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்கண்வாறு தவறான அறிக்கையை சமர்ப்பித்த சார் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு திருச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் முகாமி 09.10.2023 அன்று எதிர் மனுதாரர் திரு.இராமமூத்தி மனு அளித்ததாகவும், அந்த மனு மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்கீழ் 18.12.2023 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 09.10.2023 அன்று அளித்த மனுவிற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்கள் என்று தகவல் கோரியதாகவும், இந்த மனுவானது பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது)விடமிருந்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் ஆய்வாளர், நில அளவை பதிவேடுகள் மற்றும் பராமரிப்பு துறைக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)-ன்கீழ் RTI Special reg 1672479/2024 (D-5) நாள் 08.01.2024 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த மனுவானது 14.02.2024 அன்று பொதுத் தகவல் அலுவலர் மற்றும மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களிடமிருந்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் ஆய்வாளர் நில அளவை பதிவேடுகள் துறை அவர்களுக்கு மனு மாற்றம் செய்யப்பட்ட தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அம்மனுவில் நில அளவையர் வாதிக்கு சாதகமாக நிலத்தின் அளவை 1.6 மீட்டர் என்பதற்கு பதிலாக 0.6 மீட்டர் என்று மாற்றி நீதிமன்றத்தில் பொய்யான ஆவணமாக சார் ஆய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்டுளளதால் இதன் உண்மை நிலை குறித்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வட்டத் துணை ஆய்வாளர் கு.சித்தார்த்தன் ஆகிய தனக்கு வாய்மொழியாக நகரளவை வரைபடத்தில் உண்மையான அளவு குறித்து மனுதாரருக்கு பதில் அளிக்கும் பொருட்டு கோரியதன் அடிப்படையில் மனுதாரரகு 1.6 மீட்டர் அளவே வரைபடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், வட்டாட்சியர் அலுவலக ப.மு.எஸ்.5216/2024, நாள் 24.12.2024 பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வட்டத் துணை ஆய்வாளர் ஆகிய தான் (கு.சித்தார்த்தன்) மேற்குறிப்பிட்ட அளவு சம்மந்தமான தகவலை தவிர மனுதாரருக்கு எந்தவிதமான தவறான தகவல் எதுவும் வழங்கவில்லை என்பதையும், மேலும் நீதிமன்றத்திற்கு தவறான அளவு குறிப்பிட்டு அறிக்கை சமர்ப்பித்த சார் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து தனது வரம்புக்குள் அடங்கியதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விளக்கத்தை குறிப்பிட்டு, முதல் மேல்முறையிட்டு அலுவர்/ வட்டாட்சியர், திருச்சி கிழக்கு அவர்கள், மேற்படி அளவை தொடர்பாக திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டத் துணை ஆய்வாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்படி மாநகராட்சி சர்வேயர், சப்இன்பெக்டர் ஆப் சர்வே திரு.தமிழழகன் என்பவர் மீது மாண்பமை நீதிமன்ற வழக்கு எண்.OS-1348/2022 IA No-2/2022-ல் தொடர்புடைய சொத்தின் மீதான அளவுகளில் நீதிமன்றத்திற்கு தவறான அறிக்கை அறித்ததற்காக விசாரணை செய்து துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி உதவி இயக்குநர் (ம) மாவட்ட ஆட்சியின் நேர்முக உதவியள் (நில அளவை), நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை அவர்களுக்கு

*கடிதம் (ப.மு.அ2/09/2026, நாள் 25.03.2026) அனுப்பப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

3. இதற்கிடையில், மனுதாரர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள அவரது 02.04.2026 மற்றும் 12.04.2026 தேதியிட்ட கடிதத்தில். தனக்கு தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் கடிதம், முதல் மேல்முறையீட்டு அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள, மனுதாரரின் 09.10.2023 தேதியிட்ட மனு மீது, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் சொத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அளவீடு, தொடர்பாக, நீதிமன்றத்தில், தவறான அளவீடு சமர்ப்பித்த திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சர்வேயர், சப்இன்ஸ்பெக்டர் ஆப் சர்வேயர், திரு.தமிழழகன் எனவும், அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி இயக்குநர் (ம) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில அளவை), நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக, முதல் மேல்முறையீட்டு அலுவலர் அறிக்கையில் குறிப்பிட்டு (நகல் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது) இவ்வாணையத்தில் சமர்ப்பித்துள்ளார்.

b) ஆனால், மேற்படி தகவல் இவ்வாணையத்தின் 28.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி c-ல் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு வழங்கப்பட்டதற்கான ஆவணம் ஏதும் பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

c) எனவே, **முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், திருச்சி கிழக்கு வட்டம் அவர்கள்** இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுதாரரின் 09.10.2023 தேதியிட்ட மனு மீது நாளதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விபரங்களை, கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை, தங்கள் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக **இவ்வாணையத்தில் 22.05.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுகிறது.**

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 4201/E/2024**

**<u>பெறுநர்</u>**

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ஆ.இராமமூர்த்தி, த/பெ.M.R.ஆறுமுகம் செட்டியார்,
140, EB ரோடு,
ராமபாலா நிலையம்,
முருகன் தியேட்டர் எதிரில்,
திருச்சிராப்பள்ளி - 620 002.

Copy to: File MP/PA,